**Arimaa Nokku Journal** **ISSN: 2320-4842**
**(UGC Care Group-I Journal)** **Vol-18 No. 04 October–December 2024**

**Kanaklata Barua - An Unsung Heroine of Indian National Movement**

# கனக்லதாபருவா - இந்திய சுதந்திர இயக்கத்தில் மறைக்கப்பட்ட ஒரு தேசிய தலைவி

**முனைவர் பா. முருகேஸ்வரி**
இணைப்பேராசிரியர், வரலாற்றுத்துறை
எம்.வி.முத்தையா அரசு மகளிர் கலைக்கல்லூரி, திண்டுக்கல்.

**ABSTRACT**
Kanaklata Barua was one of the greatest unsung women national leaders in the Indian Independence Movement. In the year 1942 the Indian National Congress meeting was held in Mumbai which resolved to 'do or die ' for Indian Independence of the country. Along with kanaklata the young boys and girls joined in the Movement. She was shot dead by the British police while leading a procession against the British regime bearing the National Flag during the Quit India Movement of 1942. Mahatma Gandhi once said 'Man can never be a woman's equal in the spirit of selfless service with which nature has endowed for' about the brave women freedom fighters of India. According to his words Kanaklata's sacrifice for the cause of freedom of our Indian soil from the British has remained as a great source of inspiration for thousands of native women folk in the next generation.



**KEYWORDS**: Quit India Movement, Assam, Kanaklata Barua.

## முன்னுரை

இந்திய சுதந்திரம் கத்தியின்றி இரத்தமின்றி அகிம்சை வழிப் போராட்டங்களால் பெறப்பட்டது அல்ல. பிரிட்டிஷ் காலனி ஆதிக்கத்தின் கீழ் இந்தியர்கள் அடிமைப்பட்டுக் கிடந்தபோதும் மக்கள் மனதில் தேசிய உணர்வு ,எண்ணற்ற துணிச்சல், மன உறுதி மற்றும் தியாக மனப்பாங்கு மேலோங்கி நாட்டின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் ஊடுருவி இருந்தது. காந்தியடிகளின் வருகைக்கு முன்னதாகவே இந்திய மக்கள் பல்வேறு தலைவர்களின் கீழ் ஒன்று திரண்டு ஆங்கிலேய ஆதிக்கத்தை எதிர்த்து போராடி வந்தனர். இப்போராட்டத்தில் சிலர் தங்களது வாழ்க்கையையே பணயம் வைத்தனர். இன்னும் சிலர் உயிரை துச்சமென எண்ணி நாட்டின் விடுதலை ஒன்றே குறிக்கோளாக இருந்து விடுதலைவேள்விக்காக தங்களை ஒப்புக் கொண்டனர்.

ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த இந்திய நாட்டை வியர்வை மற்றும் செந்நீர் சிந்தி சுதந்திரத்திற்க்காக போராடி தங்களது இன்னுயிரையே தியாகம் செய்த தியாகிகளில் ஆண்களைப் போல பெண்களும் பெரும் பங்கு வகித்துள்ளனர். அடித்தட்டு சமூகப் பெண்களில்தொடங்கி உயர்குடி சமூகப் பெண்கள் வரை பாரபட்சமில்லாமல் இந்திய விடுதலைக்காக ஒன்றிணைந்து போராடி உள்ளனர். அகிம்சைவழி மட்டுமல்லாது ஆயுதமேந்திய பல போராட்டங்களிலும் பெண்கள் பங்கேற்று உயிர் தியாகம் செய்துள்ளனர். நாட்டின் விடுதலைக்காக போராடியதில் ஆங்கிலேயர்களின் சீற்றத்திற்கு பெண்கள் உட்பட்டாலும் அது அவர்களின் தேசப்பற்று மீதான மோகத்தை ஒருபோதும் தணிக்கவில்லை. பழமைவாத கட்டுப்பாடுகள் நிறைந்த அந்நாளில் ஆயுதம் தாங்கி

ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக வீதிகளில் இறங்கிப் போராடிய வீர மங்கைகள் பலரின் சுதந்திரத் தீயை எதனைக் கொண்டும் அளவிட முடியாது. அந்த வரிசையில் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்ட பல பெண்களில் துணிச்சலான வீர மங்கையாக திகழ்ந்தவர் அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இளம்பெண் கனக்லதா பருவா.

**சுதந்திரப் போராட்டத்தில் அசாமின் பங்கு**

1919ம் ஆண்டு ஜாலியன்வாலாபாக் படுகொலைக்குப் பிறகு இந்திய சுதந்திர இயக்கம் ஒரு புதிய உத்வேகத்தை அடைந்தது. மேலும் சுயராஜ்ஜியத்தை பெறுவதற்காக நாடு முழுவதும் ஒத்துழையாமை இயக்கமும் தொடங்கப்பட்டது. இந்திய தேசிய இயக்கத்தின் தேசபக்தி மக்களின் மனதில் காட்டுத்தீயாக ஊடுருவி அனைத்து பகுதிகளுக்கும் பரவியது. இது அசாம் மாநிலத்தையும் சென்றடைந்தது.இந்திய சுதந்திரப் போராட்டத்தில் அசாம் குறிப்பிட்ட பங்கை கொண்டிருக்கிறது. அசாம் மாநிலத்தில் பல தியாகிகள் தேசத்திற்காக உயிர் தியாகம் செய்துள்ளனர். 1822ம் ஆண்டு முதல் 1857ம் ஆண்டு வரை அசாமில் விடுதலைப் போராட்ட உணர்வு இருந்ததற்கு எந்த ஒரு குறிப்பிட்ட தகவலும் கிடைக்கப் பெறவில்லை .ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலகட்டத்தில் மேற்கத்திய கல்வி அசாம் மாநிலத்தில் பரவியது. இதன் விளைவாக நிலத்தின் மீது புதிய விழிப்புணர்வு அசாம் மக்களிடையே உருவானது.

மேலும் மக்கள் மீதான நில வருவாயை அதிகரிப்பதற்கு எதிராகப் போராடவும் , பொதுமக்களின் பிற குறைகளை தீர்ப்பதற்காகவும் கல்வியறிவு பெற்ற மக்களால் அசாம் மாநிலம் தேஜ்பூர் மாவட்டத்தில் ரியாட்சபை உருவாக்கப்பட்டது. 1919ம் ஆண்டு அனைத்து அசாம் மாணவர் சங்கமும் தேஜ்பூர் மாவட்டத்தில் உருவாக்கப்பட்டு இந்திய விடுதலைக்காக அசாம் மாநிலம் தயார்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக 1934ம் ஆண்டு சட்டமறுப்பு இயக்கத்தின்போது தேசப்பிதா மகாத்மாகாந்தியடிகள் தேஜ்பூர் மாவட்டத்திற்கு விஜயம் செய்து மக்களிடையே விடுதலை வேட்கை புரட்சி செய்தார். இக்கால கட்டத்தில் 1942ம் ஆண்டு பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டில் ஆங்கிலேய ஆதிக்கத்திற்கு எதிராக வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. விடுதலை இயக்கத்தின் செயல்பாடுகள் உச்சகட்டத்தை அடைந்து நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாக அசாம் மாநிலத்திலும் வேகம் பெற்றது.

**கனக்லதா வாழ்க்கைக் குறிப்பு**

அசாம் மாநிலம் தராங் மாவட்டம் போராங்கபாரி (தற்போது சோணித்பூர் மாவட்டப் பகுதி) கிராமத்தில் கிருஷ்ணாகாந்த் பர்வா மற்றும் கர்னேஸ்வரிபர்வா தம்பதியருக்கு மகளாக அக்டோபர் திங்கள் 22ஆம் நாள் 1942-ம் ஆண்டு கனக்லதாபருவா பிறந்தார். இவரது தாத்தா கானாகாந்தா பர்வா அசாமில் பிரபலமான வேட்டைக்காரர். இவரது முன்னோர்கள் அஹோம் மாநிலத்தின் டோலகாரியாபருவா இராச்சியத்தைச் சேர்ந்தவர்கள். பின்னாளில் இந்த வம்சத்தவர்கள் டோலகாரியா என்ற அரச பட்டத்தை துறந்தாலும் பர்வா என்ற பட்டப் பெயரை தங்களுடைய பெயரோடு இணைத்துக் கொண்டனர்.

கனக்லதா தனது ஐந்தாவது வயதில் தாயை இழந்தார். தாயின் மரணத்திற்குப் பிறகு இவரது தந்தை மறுமணம் செய்து கொண்டார். கனகலதாவின் பதிமூன்றாவது வயதில் தந்தையும் காலமானார். உடன்பிறந்தவர்களை கவனிக்கவும் வீட்டு பொறுப்புக்களை ஏற்கும் பொருட்டு தனது பள்ளிப்படிப்பை மூன்றாம் வகுப்புடன்முடித்துக்கொண்டார்.

**விடுதலை இயக்கத்தில் கனக்லதா**

வெள்ளையனே வெளியேறு இயக்கம் செய் அல்லது செத்துமடி என்ற முழக்கத்துடன் நாடெங்கிலும் வேகம் பெற்றது. ஆரம்ப காலகட்டத்தில் இவ்வியக்கத்தின் செயல்பாடுகள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக அசாம் மாநிலத்தில் அமைதியான முறையில் தொடங்கியது. இருப்பினும் அசாம் மக்கள் மீதான ஆங்கிலேயர்களின் அட்டுழியங்கள் அதிகரித்தன. மேலும் பல காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டனர். இதன் தொடர்ச்சியாக அசாமில் காங்கிரஸ் தலைமையில் மிருத்யுபாஹினி என்ற தற்கொலை படை உருவாக்கப்பட்டது. இளைஞர்கள் மற்றும் பெண்கள் இப்படையில் இணைந்தனர். தேசத்தின் மீது இருந்த ஈடுபாடு காரணமாக இப்படையில் பதினேழு வயது நிரம்பிய கனக்லதா பருவா இணைந்தார். இவருக்கு உறுப்பினர் பதவி வழங்கப்பட்டது.

ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராக அசாம் மாநிலத்தில் பரவலான போராட்டங்கள் நடைபெற்றன. போராட்டத்தின் உச்சகட்டமாக ஆங்கிலேயே சாம்ராஜ்யத்தின் அடையாளமாக கருதப்படும் நீதிமன்றம் மற்றும் காவல்நிலையத்தில் இந்திய தேசிய கொடி ஏற்றுவது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கனக்லதா தேசியக்கொடியை ஏற்றுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டார். செப்டம்பர் திங்கள் 20-ம் நாள் 1942-ம் வருடம் கோப்பூர் பிராந்தியத்தில் உள்ள உள்ளூர் காவல் நிலையத்தில் தேசியக் கொடியை ஏற்ற கனக்லதா தலைமையில் கிராம உறுப்பினர்கள் காவல்நிலையம் நோக்கி சென்றனர். ஆயுதம் எதுவும் ஏந்தாமல் அகிம்சை வழியில் ஊர்வலமாக சென்றனர். கலைந்து சென்றுவிடுங்கள் இல்லாவிடில் கடுமையான விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று போலீஸ் அதிகாரி கூட்டத்தை எச்சரித்தார். அகிம்சை வழியில் எங்கள் போராட்டத்தை நடத்துகிறோம். காவல் நிலையத்தில் எங்கள் தேசிய கொடியை ஏற்றியே தீருவோம். பின்வாங்க மாட்டோம். எங்களுடையது அறவழிப் போராட்டம் என்று கோஷமிட்டு முன்னேறி சென்றனர். எந்தவொரு ஆயுதமும் ஏந்தாத அந்த ஊர்வலத்தை நோக்கிவிளையாடியது பிரிட்டிஷ் அரசாங்கம். கனக்லதா சுடப்பட்டார். இருப்பினும் தன் கையில் இருந்த தேசியக் கொடியை மற்றொரு உறுப்பினர் முகுந்தாகாகதியிடம் கொடுத்துவிட்டு மண் சாய்ந்தார். தேசியக் கொடியை பற்றியிருந்த காரணத்திற்காக முகுந்தாவையும் சுட்டு வீழ்த்தியது ஆங்கில அரசாங்கம். இவ்விருவரின் உயிர் தியாகம் எஞ்சியிருந்த வீரர்களிடையே துணிச்சலை அளித்தது. தொடர்ந்து வீரத்துடன் முன்னேறிச் சென்றனர். போலீசாரின் கட்டுப்பாட்டையும் அடக்குமுறையையும் மீறி எஞ்சியிருந்த உறுப்பினர்கள் தேசியக் கொடியை காவல் நிலையத்தில் ஏற்றினர். அதே நாளில் தேகியாஜூலி மாவட்ட காவல் நிலையத்தில் பதினொரு ஆயுதமற்ற கிராமவாசிகள் ஆங்கிலேய காவல் நிலையத்தில் முத்தரப்பு கொடியை ஏற்ற முயன்ற போது

காவல்துறையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். அவர்களில் மூவர் பதிமுன்று வயது நிரம்பிய நிரம்பிய பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அசாம் மக்களின் தேசப்பற்றும் தியாக எழுச்சியும் வெள்ளையனே வெளியேறு இயக்கத்துக்கு எல்லையற்ற புத்துணர்ச்சியும் ஊக்கமும் அளித்தது. 1947-ம் ஆண்டு ஆங்கிலேயர்கள் நம் நாட்டை விட்டு ஒட்டுமொத்தமாக வெளியேறுவதற்கு இப்போராட்டம் மிகவும் உறுதுணையாக இருந்தது.

நாட்டின் விடுதலைக்காக பதினேழாவது வயதில் உயிர் தியாகம் செய்த கனக்லதாபருவாவின் தேசப்பற்றை நினைவுகூறும் வகையில் அசாமில் பர்காங் என்ற இடத்தில் கனக்லதாபருவா நினைவிடம் நிறுவப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சுதந்திர தினத்தன்று நினைவிடத்தில் கனக்லதாவின் வீரமும் தியாகமும் போற்றப்படும் வகையில் நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. மேலும் கனக்லதா மாடல் பள்ளி நிறுவப்பட்டு மாணவர்களிடையே இவரின் வீரச்செயல்கள் போதிக்கப்படுகின்றன. கனக்லதா வீரச்செயலை நினைவூட்டும் விதமாக அசாம் மாநிலம் தேஜ்பூர் மாவட்டத்தில் கனக்லதா உத்யான் எனப்படும் பூங்காவில் அவர் சுடப்பட்ட நிகழ்ச்சி தத்ரூபமான சிலையாக செதுக்கப்பட்டு பார்வையாளர்களுக்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய கடற்படையின் ரோந்துக்கப்பல் 'The Fast Patrol Vessel ICGS" கனக்லதாபருவா என்ற பெயர் சூட்டப்பட்டு 1997-ம் வருடம் முதல் இந்தியக் கடற்படையில் இணைக்கப்படுள்ளது. 2011ம்ஆண்டு அசாம் மாநில அரசாங்கம் கனக்லதா பருவாவின் தேசப்பற்றை கௌரவிக்கும் விதமாக கௌரிபூரி மாவட்டத்தில் உருவச்சிலை நிறுவியுள்ளது. கனகலதா பருவா மற்றும் முகுந்தா காந்தி ஆகியோரின் தேசப்பற்றை பறைசாற்றும் விதமாக விழிப்புணர்வு நாடகங்கள் மற்றும் நாட்டுப்புறப் பாடல்களும் இன்றும் அக்கிராம மக்களின் அன்றாட வாழ்வில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. கனக்லதாவின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் விதமாக **purabki Awaz** என்ற திரைப்படம் ஹிந்தி மொழியில் வெளிவந்துள்ளது.

**FINDINGS**

- பெண்கள் ஒருபோதும் ஆங்கிலேயரின் அதிகாரத்திற்கு அஞ்சாமல் தேசப்பற்று மிக்கவர்களாக காணப்பட்டனர்.
- கனக்லதாபருவா தனது வாழ்வை நாட்டின் விடுதலைக்காக முழுமனதுடன் அர்ப்பணித்துக்கொண்டவர்.
- பெண்களில் மன வலிமை ,தேசபக்தி தியாக உணர்வு ,மற்றும் உண்மை தன்மை கொண்டவராக கனக்லதாபருவா செயல்பட்டது பிற்கால பெண் சமூகத்திற்கு ஓர் முன்னுதாரணமாக இருந்தது.
- வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் அஸ்ஸாம் மாநில மக்கள் தங்களை ஈடுபடுத்திய விதம் இந்திய தேசத்தின் மற்ற பகுதிகளில் வாழ்ந்தவர்களுக்கு ஓர் உத்வேகமாக இருந்தது.

- இந்தியாவின் ஜான்சி ராணி, பிரான்ஸ் நாட்டின் ஜோன் ஆஃப் ஆர்க் போன்ற வீராங்கனைகளுக்கு ஒப்பாக அசாம் மாநிலத்தை சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீராங்கனை கனக்லதாபருவாவின் வீரமும் தியாகமும் தேசப்பற்றும் ஒப்பிடப்படுகிறது.

## முடிவுரை

இந்திய சுதந்திரப் போரட்டத்தில் ஆண்களுக்கு இணையாக பெண்களும் திரளாக பங்கு கொண்டனர். அசாம் மாநிலத்தைச் சேர்ந்த வீரமங்கை கனக்லதாபருவாவின் விடுதலை வேட்கை நாடறியாத ஒன்று. பழமைவாத கட்டுப்பாடுகள் நிறைந்த அந்நாளிலே ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக வீதிகளில் இறங்கி இந்திய நாட்டின் விடுதலைக்காக போராடியவர் கனக்லதா. தனது பதினேழாவது வயதில் நாட்டின் விடுதலைக்காக உயிர்தியாகம் நீத்த கனக்லதாபருவாவை கௌரவிக்கும் வகையில் அசாம் மாநில அரசாங்கம் கௌபூர் மாவடத்தில் தேசியக்கொடி கையில் ஏந்தி உள்ளவாறு உருவச்சிலை அமைத்து அன்னாரின் தேசப்பற்று மற்றும் வீர உணர்வை எதிர்கால பெண்சமூகத்திற்கு நினைவூட்டுகிறது. அசாம் மாநிலம் கனக்லதாவின் வடிவத்தில் வலிமையின் அடையாளமாக கருதப்படுகிறது,

## REFERENCES

### தமிழ்

1. இலந்தை சு. இராமசாமி, இந்திய சுதந்திரப் போராட்டம், கிழக்கு பதிப்பகம், சென்னை, 2016.

### ENGLISH

1. Anuradha Dutta., Assam in the Freedom Movement, Darbari Prokashan, Calcutta, 1991.
2. Chandra,B., Tripati,. A., Freedom struggle, National Book Trust, New Delhi, 1972.
3. Dutta, P.N., Glimpses into the History of Assam, Calcutta, 1994.
4. Guptajit Pathak., Asssamese women in Indian Independence Movement with a special Emphasis on Kanaklatha Barua , A Mittal Publication, Newdelhi, 2008.
5. Rajendra Raj,V., Role of Women in India's Freedom struggle, Discovery publishing House, Newdelhi, 1994.
6. Sharma, L.P., History of Modern India, Delhi, 1992.
7. The Hindu, 30th September 2018.
8. India today, 27th June 2019.